# சிலப்பதிகாரத்தில் வாழ்வியல் கூறுகள்

**முனைவர் ந. கல்யாணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.ஆர்.எம். திருச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி

**ஆய்வுச்சுருக்கம்**

சிலப்பதிகாரத்தில் மக்களுடைய வாழ்வியல் சார்ந்த செய்திகளை நாம் அறிந்துகொள்ள இலக்கியங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. தமிழில் வெளிவந்த பல்வேறு இலக்கியங்களுள், காப்பியங்கள் மக்களின் வாழ்வியலைத் தொகுத்துக் காட்டும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன எனலாம். வாழ்வியல் கூறுகளுள் ஒன்றான கலை தொடர்பான செய்திகள் காப்பியங்களுள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சிலப்பதிகாரத்தில் காணப்பெறும் தமிழரின் கலை சார்ந்த வாழ்வியல் குறித்த செய்திகளை இவ்வாய்வின் மூலம் அறியலாம்.

சிலம்பு கலைகள் மற்றும் கலைஞர்கள் பற்றிய வாழ்வியல் செய்திகளை நுட்பமாக எடுத்து உரைக்கின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகைத் திணையின் மூலமாக வாழ்வியலை அறிய முடிகிறது.

**ABSTRACT**

Literature greatly helps us to know the news related to the life of the people in Silapathikaram. Among the various literatures published in Tamil, Kappiyams can be seen as a mirror of time that summarizes the life of the people. News related to art, which is one of the elements of life, is included in the archives. Among them, the news about the artistic life of Tamils found in Silapathikaram can be known through this study. Silambu subtly conveys biographical stories about arts and artists. Life can be known through the five types of dynasties namely Kurinji, Mullai, Marutham, Neithal and Balai. Silambu subtly conveys biographical stories about arts and artists. Life can be known through the five types of dynasties namely Kurinji, Mullai, Marutham, Neithal and Balai.

## முன்னுரை

இளங்கோவடிகள் வாழ்ந்த காலத்தில் மக்களின் கலை சார்ந்த வாழ்க்கை குறித்த செய்திகள் சிலப்பதிகாரம் முழுமையும் காணப்படுகின்றன, காப்பியத்தின் முதல் பகுதியான மங்கல வாழ்த்துப் பகுதியில் குழுவினரின் ஆடல், பாடல், முரசுகள், மத்தளங்கள், சங்குகள் ஆகிய இசைக்கருவிகளின் முழக்கங்களைக் காணலாம். அரங்கேற்றுக் காதையில் ஆடலாசிரியன், கவிஞன், இசையாசிரியன், தண்ணுமையாசிரியன், குழலாசிரியன், யாழிசைப்பவர் ஆகியவர்களைக் குறித்த விரிவான ஆழமான செய்திகள் காணப்படுகின்றன.

கடலாடு காதையில் மாதவியின் ஆடல் வகைகள் குறித்த செய்திகளும், கானல் வரியில் கோவலன் மாதவி ஆகிய இருவரும் யாழிசையில் பாடும் பாடல்களில் பல்வேறு இசைத்தமிழச் செய்திகளும் காணப்படுகின்றன. யாழ் மீட்டுவது குறித்த நுட்பமான செய்திகள் இதில் விவரிக்கப்படுகின்றன. அரச வீதியில் கூத்தர், கூத்தியர், குயிலுவர், சூதர் முதலிய இசைக் கலைஞர்கள் சிறப்புடன் வாழ்ந்த செய்திகளைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகின்றது.

### 1. மருத நிலம்

பண்டைத் தமிழர்கள் நீர்நிலைகளை ஒட்டி அமைந்த வயல் மற்றும் வயல் சார்ந்த பகுதியினை ‘மருதம்’ என்று அழைத்தனர். மருத நில மக்களின் கலை சார்ந்த வாழ்வியல் செய்திகள் புகார் காண்டத்தில் அமைந்துள்ளன.

அந்திமாலை சிறப்புச் செய் காதை மற்றும் இந்திரவிழாவூரெடுத்த காதை,அரங்கேற்று காதை கலைத்தொடர்பான வாழ்வியலை எடுத்துரைக்கின்றது.

**இசை சார்ந்த வாழ்வு**

இளங்கோவடிகள் வாழ்ந்த காலத்தில் நாட்டில் அமைதியான சூழல் இருந்துள்ளது. முடிவேந்தர்களின் முறையான ஆட்சி மூலம் மக்கள் நல்ல வளமான வாழ்வு வாழ்ந்தனர். இக்காலச் சூழல் கலைகள் நன்கு வளர்ச்சி பெறுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

இசை, நடனம், ஓவியம், கருவி, கட்டடக்கலை, ஆடை புனைதல், ஒப்பனைக் கலை முதலான பல கலைகளும் சிறந்தோங்கி இருந்தமையைச் சிலப்பதிகாரம் மூலம் அறியலாம்.

**"குழலினும் யாழினும் குரல்முதலேழும்**
**வழுவின்றி இசைத்து வழித்திறங்காட்டும்**
**அரும் பெறல் மரபிற் பெரும்பாண்இருக்கையும்"**
**(சிலப்பதிகாரம் இந்திர விழவு: 35-37)**

என குழலிசை, யாழிசை, குரலிசை ஆகியவைகளைக் குற்றமின்றி இசைக்கும் பெரும் மரபு வழி வந்த பாணர்கள் வாழ்ந்திருந்தனர்.

**"பயில் தொழில் குயிலுவர் பன்முறை கருவியர்**
**நகை வேழம்பரொடு வகை தெரி இருக்கையும்"**
**(சிலம்பு இந்திர விழவு: 52-53)**

குயிலுவர் எனப்படுவோர் தோற்கருவி, துளைக்கருவி மற்றும் உருக்குக் கருவிகளில் பண் இசைப்பவர்கள், பன்முறை கருவியர் எனப்படுவோர் கொட்டுக் கருவிகளை இசைப்பவர்கள் எனப்படுவர்.

இவர்கள் மருவூர் பாக்கத்தில் இருவேறு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

**"பண்ணி யாழ்ப்புலவர் பாடற் பாணரொடு**
**எண்ணருஞ் சிறப்பின் இசைசிறந்த தொருபால்"**
**(சிலம்பு இந்திர விழவு : 85-86)**

என்று இந்திரவிழாவில் ஒருபால் கூத்தரும், குயிலுவரும், பணிவல்வ யாழ்ப்பாணரும், பாடல் வல்லிப் புலவர்களும் கூடி நின்று இன்னிசை பாடினர்.

**மாதவியின் அரங்கேற்றம்**

கணிகையர் குலத்தில் பிறந்திருந்தாலும் கற்பரசியாக வாழ்ந்தவள் மாதவி. ஆடல், பாடல், அழகு என்ற மூன்றில் ஒன்றும் குறையாமல், பிறந்த ஐந்தாம் ஆண்டு முதல் தண்டியம் பிடித்து ஏழாண்டு இடைப் பொழுதில் 64 கலைகளையும் கற்றுத் தேர்ந்தாள். தனது அரிய திறமையை மன்னன் முன்பு வெளிப்படுத்த விரும்பினாள், தேசிகக் கூத்தையும், அந்தரக்கொட்டுடன் கூடிய ஆடலையும் மாதவி முறைப்படி, இலக்கணம் வழுவாமல் ஆட, முதற்கட்ட ஆடல் முடிவடைகிறது. இதன் பின்னர் மங்கலப் பண்ணாகிய பாலைப்பண் பாடப்படுகிறது அதனை முறை தவறாது சிறிதும் வழுவாது ஆளத்தியிலே வைத்துப் பாடுகின்றனர். **"பாடலில் மங்கலச் சொல்லை முன்னிறுத்தி உள்ளனர். பாடலில் இசையமைதி சிறப்பாக அமைந்துள்ளது. இப்பாடலுக்குத் தக்கவாறு பாட்டும், கொட்டும், ஆடலும் நடைபெறுகின்றன என அரங்கில் நடைப்பெற்ற பல்வேறு நிகழ்வுகள் விவரிவாகக் காட்டப் பெறுகின்றன"**[1].

பொன்னால் இயன்ற பூங்கொடி ஒன்று அசைந்து ஆடுவதுபோல் மாதவி இலக்கணம் வழுவாமல் ஆடியது கண்டு அனைவரும் மகிழ்வுறுகின்றனர். மாதவியின் ஆடல் திறமையைக் கண்டு வியந்த மன்னன் ‘தலைக்கோல்’ என்ற பட்டத்தையும், மரகத மணி மாலையையும் தலையரங்கேறி முதன்மைநிலை பெற்ற கணிகையருக்கு வழங்கும் முறைப்படி ஆயிரத்தெண்கழுஞ்சுப் பொன்னையும் பரிசாக வழங்கிச் சிறப்பித்தான், இவை அக்கால வழக்கமாக இருந்துள்ளமையை அறியலாம்.

மருத நிலமான புகார் நகரில் வாழ்ந்த மக்கள் இசையுடன் இணைந்த இன்ப வாழ்வு வாழ்ந்தனர் என்பதனை இச்செய்திகள் விளக்கிக் காட்டுகின்றன.

வாழ்த்துக் காதையுள் அமைந்த அம்மானை வரி, கந்துக வரி, ஊசல் வரி ஆகியவை மருத நில மக்களின் வாழ்வியல் சார்ந்தவைகளாக அமைந்துள்ளன. வள்ளைப் பாட்டு, சோழன், பாண்டியன், சேரன் ஆகியோரை வாழ்த்துவதாக அமைந்துள்ளது.

**வாழ்த்து (சோழன்)**

**“எல்லா! நாம்**
**காவிரி நாடனைப் பாடுதும்;, பாடுதும்**
**பூவிரி கூந்தல்! புகாh”** **(சிலம்பு வாழ்த்துக் காதை 16)**

தோழி யாம் காவிரி நாடனைப் பாடுவோம் மலர்மிக்க கூந்தலினை உடையவளே யாம் புகார் நகரினைப் பாடுவோம்.

அம்மானை வரியில் புகார் நகரைப் பற்றிய புகழ் செய்தியை,

**“வீங்குநீர் வேலி உலகு ஆண்டு,**
**விண்ணவர்கோன் ஓங்கரணம் காத்த உரவோன் யார்,**
**அம்மானை ஓங்கரணம் காத்த உரவோன் உயர் விசும்பில**
**தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண்,**
**அம்மானை சோழன் புகார் நகரம் பாடலோர்,**
**அம்மானை”** **(சிலம்பு வாழ்த்து காதை 17)**

கடலினையே நாற்புறமும் வேலியாகவுடைய உலகினை ஆண்டு வந்ததும், விண்ணவர் போமானின் உயர்ந்த அரணினைக் காத்ததுமான வலிமையுடையவன் யாவனோ, உயரிய மதில்களைக் காத்த வலிமையினiயுடையவன், தூங்கெயில் மூன்றினையும் அழித்த சோழன்காண், அம்மானாய் சோழன் புகார் நகரினைப் பாடுவோம் யாம், அம்மானாய் என்றனர்.அம்மானை என்பது மகளிர் விளையாடல்களுள் ஒன்று. இப்பாடல்கள் மூவர் அமர்ந்து அம்மானைக் காய்களை உருட்டி விளையாடுவதாக அமையும். ஒரு பெண் கேள்வி கேட்பதாகவும், ஒருத்தி விடையளிப்பதாகவும் ஒரு பெண் பொதுவாகப் பாடுவதாகவும் அமையும். சோழனை வாழ்த்திப் பாடுவதாக இவ்வம்மானை வரி அமைந்துள்ளது.

கந்துகவரியில் பாண்டிய மன்னனை புகழ்தல் நிலையை,

**“பொன்னிலங்கு பூங்கொடி! பொலஞ்செய்**
**கோதை வில்லிட,**
**மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப, ஆர்ப்ப,**
**எங்கணும்**
**தென்னன் வாழ்க! வாழ்க! வென்று சென்று,**
**பந்து அடித்துமே**

**தேவர் ஆர மார்பன் வாழ்க! என்று பந்து**
**அடித்துமே"** **(சிலம்பு வாழ்த்துக் காதை: 21)**

அழகு விளங்கும் பூங்கொடியே! பொன்னாற் செய்த கோதையானது ஒளிர், மின்போல் விளங்கும் மேகலைகள் அசைந்தாடி எல்லா இடங்களிலும் தென்னவன் வாழ்க, என்று வாழ்த்தி நாம் பந்தடிப்போம்! தேவர் ஆர மார்பன் வாழ்க வாழ்க என்று வாழ்த்தி, நாம் பந்தடிப்போமாக என்றனர்.

கந்தக வரிபெண்கள் பந்தடித்து விளையாடும் போது பாடப்படுவது கந்துக வரி எனப்படும் பாடல் வகையாகும். சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னனை வாழ்த்திப் பெண்கள் பந்தடித்துக் கொண்டு பாடுவதாக அமைந்துள்ளது.

**"வடங்கொள் மணியூசல் மேல்இரீஇ ஐயை**
**உடங்கு ஒருவர் iகிநமிர்தாங்கு: ஒற்றை**
**மெல் ஊக்கக்,**
**கடம்பு முதல் தடிந்த நாவலனைப் பாடிக்**
**குடங்கை நெடுங் கண்பிறழ, ஆடாமோ ஊசல்,**
**கொடுவிற் பொறிபாடி, ஆடோமோ ஊசல்," (சிலம்பு வாழ்த்துக்காதை: 24)**

ஊசல் வரிபெண்கள் ஊஞ்சல் ஆடிக்கொண்டு பாடும் பாடல்களாக இவை அமைந்துள்ளன. இவை சேர மன்னனைப் புகழந்து பாடுவதாக அமைந்துள்ளன.

**"தீங்கரும்பு நல்லுலக்கையாகச்செழுமுத்தம்**
**பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார் மகளிர்**
**ஆழிக் கொடித்தின்தேர்ச்செம்பியன் வம்பலர் தார்ப**
**பாழித் தடவரைத்தோள் பாடலே பாடல்**
**பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்!"(சிலம்பு வாழ்த்துக்காதை:27)**

இனிய கரும்பினை நல்ல உலக்கையாகக் கொண்டு, செழுமையான முத்துக்களை, விளங்கும் அழகிய காஞ்சி மரத்தின் நிழற்கண்ணே நின்றவராகப் புகார் நகர மகளிர் குற்றுவர், அந்நகருக்குரியவன், உருள்களையுடைய கொடி பறக்கும் திண்ணிய தேரினையுடைய சோழன், அவனது வலிய, பெரிய, குன்று போன்ற, மணம் பரந்த ஆத்திமாலை சூடிய தோள்களைப் பாடும் பாடலே சிறந்த பாடல் பாவைமார் ஆத்திமாலையை இரந்து வேண்டும் அப்பாடலே சிறந்த பாடல்.

வள்ளைப்பாட்டு புகார் நகரப் பெண்கள் இரும்பு உலக்கையில், செழுமையான முத்துக்களைக் குற்றுபவர்கள் என்றும் பாண்டிய நாட்டுப் பெண்கள் பவள உலக்கை கொண்டு முத்துக்களைக் குற்றுவர் என்றும், சந்தனத்தால் ஆன உலக்கை கொண்டு முத்தினை வஞ்சி நகரத்துப் பெண்கள் உரலில் குற்றுவார்கள் என்றும் தமிழகத்தின் வளமையைப் பாடுகிறார் இளங்கோவடிகள்.

மருத நிலம் கலைகளில் பிறப்பிடமாகத் திகழ்ந்துள்ளது. நடனம், கூத்து, குரலிசை, யாழிசை, தண்ணுமை முதலிய தாளக் கருவிகள் இசைத்தல், நாட்டுப்புற இசை வடிவங்களான அம்மானை வரி, கந்துக வரி, ஊசல் வரி, வள்ளைப் பாட்டு முதலியன மக்கள் வாழ்வில் இரண்டற கலந்திருந்தமையைச் சிலப்பதிகாரம் நன்கு விளக்குகிறது.

**நெய்தல் நிலம்**

பழந்தமிழ் மக்கள் கடல் மற்றும் கடல் சார்ந்த பகுதியினை ‘நெய்தல் நிலம்’ என்று அழைத்தனர்.புகார்க்காண்டத்தில் அமைந்துள்ள கடலாடுகாதை மற்றும் கானல்வரி ஆகிய பகுதிகளில் நெய்தல் நில மக்களின் கலை சார்ந்த வாழ்வியல் செய்திகளை விரிவாகக் காணப்பெறுகின்றன.

**கடலாடுகாதை**

புகார் நகர மக்கள் இந்திரவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடிவிட்டு, பூம்புகார் கடற்கரைக்குச் சென்று புனலாடிய செய்திகளைக் கூறுவதால் கடலாடு காதை எனப் பெயர் பெற்றது. “**இதன் முற்பகுதியில் மாதவி ஆடிய பதினோரு ஆடல்கள், அவற்றுக்குரிய பாடல்கள் குறித்த விளக்கங்கள் இடம் பெறுகின்றன. மாதவி நன்னீராடியபோது பயன்படுத்தப்பட்ட பல்வேறு வாசனைப் பொருட்களும், அவள் அணிந்த ஆடை அணிகலன்களும் பண்டைத் தமிழரின் நாகரிகச் சிறப்பினை நன்கு காட்டுகின்றன.**”[2] இது மாதவியின் செல்வ செழிப்பை உணர்த்துகிறது.

**மாதவியின் ஆடல்கள்**

மாதவி ஆடிய பதினொரு ஆடல்களைக் கூறத் தொடங்கும் முன் தேவபாணி என்ற இசைப்பாடல் வகையினைக் கூறுகிறார். பதினொரு ஆடல்களுக்கும் முதலாக மாயவன் காத்தற் கடவுள் ஆகையால் அவரை முதலில் வணங்கிப் பாடப்படுவது தேவபாணி ஆகும்.

தேவபாணியைத் தொடர்ந்து, கொடுகொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல்லாடல், துடிக் கூத்து, குடைக் கூத்து, குடக்கூத்து, பேடி ஆடல், மரக்கால் ஆடல், பாவைக் கூத்து, கடையம் ஆகிய பதினொரு வகையான ஆடல்களை ஆடினாள். விண்ணவரும் மண்ணவரும் வியக்க இவ்வாடல் அரசி ஆடிய ஆடல்களையும், அதற்கேற்பப் பாடிய இசையினையும் அனைவரும் வியந்து போற்றினர். அதைக்கண்ட கோவலன் மனம் பொறுக்கமாட்டாதவனாக, மாதவி மீது ஊடல் கொண்டான். அவன் ஊடலைத் தீர்க்க எண்ணிய மாதவி முதலில் நன்னீராடினாள்.

**நன்னீராடுதல்**

மாதவியின் கூந்தலை நறுநீராட்டுவதற்குப் பயன்படுத்தப் பெற்ற பல்வேறு வாசனைத் திரவியங்களை இளங்கோவடிகள் பட்டியலிடுகிறார்.

**“பத்துத் துவரினும் ஐந்து விரையினும்**
**முப்பதிரு வரை ஓமாலிகையிலும்**
**ஊறிய நன்னீருரைத்த நெய்வாசம்**
**நரிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்**
**புகையிற் புலத்திய ஓமென் கூந்தலை**
**வகைதொறு மான்மதக் கொழுஞ்சேறுட்டி”**

**(சிலம்பு கடலாடுக்காதை: 77-81)**

பத்துத் துவரினும் நலம்பெறவாட்டி என்பது வாசநெய்யுரைத்த மணங்கமழும் கரிய கூந்தலைப் பத்து வகையான துவரினாலும் ஐந்து வகை விரையினாலும் முப்பத்திரண்டு வகை ஓமாரிகையாலும் ஊறிக் காய்ச்சசப்பட்ட நன்னீராலே நீராடினர் என்பது பொருளாகும்.

**மாதவி அணிந்த அணிகலன்கள்**

மாதவி தலையிலிருந்து கால் வரை அணிந்த அணிகலன்கள் பொன், வயிரம், முத்து, மாணிக்கம், பவளம் ஆகியவற்றால் செய்யப்பட்ட அழகிய நகைகள் ஆகும.அவை அக்காலத் தமிழரின் நாகரிகத்தின் மேம்பாட்டை அறியும் வண்ணம் அமைந்துள்ளன.

**"அலத்தக மூட்டிய அஞ்செஞ்சீறடி**
**அலத்தகு மெல்லிரல் நல்லணி செறிஇப்**
**பரியக நூபுரம் பாடகம் சதங்கை**
**அரியகம் காலுக் கமைவுற அணிந்து**
**குறங்கு செறி திறள் குறங்கினிற் செறித்துப்**
**பிறங்கிய முத்திரை முப்பத்திருகாழ்**
**நிறங்கிளர் பூந்துகில் நீர்மையினுடிஇக்**
**காமர் கண்டிகை தன்னொடு பின்னிய**
**தூமணித் தோள்வளை தோளுக்கணிந்து**
**மத்தக மணியொடு வயிரங்கட்டிய**
**சித்திரச் சூடகஞ் செம்பொற் கைவளை**
**பரியகம் வாள்வளை பவளப் பல்வளை**
**அரிமயிர் முன்கைக் கமைவுற அணிந்து**
**சங்கிலி நுண்தொடர் பூண்ஞான் புனைவிளை**
**அங்கழுத்தகவிய னாரமோடணிந்து**
**கயிற்கடை ஒழுகிய காமர் தூமணி**
**செயத்தகு கோவையிற் சிறுபுறமறைத்தாங்கு**
**இந்திர நீலத் திடையிடை திரண்ட**
**சந்திரபாணி தகைபெறு கடிப்பினை**
**அங்காதகவையின் அழகுற அணிந்து**
**தெய்வ உத்தியொடு செழுநீர் வலம்புரி**
**தொய்யகம் புல்லகந் தொடர்ந்த, தலைக்கணி**
**மையீரோதிக்கு மாண்புற வணிந்து"**

**(சிலம்புகடலாடுக்காதை:82-108)**

எனப் பல்வேறு அணிகலன்களை மாதவி புனைகிறாள். மகரவாய் மோதிரம், பீலி,கான்மோதிரம் முதலிய மோதிரங்கள் கால் விரலுக்கு அணிபவை, அடுத்து பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, அரியகம் ஆகியவை காலுக்கு அணியப் பெறுவன. பரியகம் என்பது பொன்னால் செய்யப்பட்ட மணி வடம் பெருவிரல் மோதிரத்தையும் சிலம்பையும் பிணைக்கும் சங்கிலி எனப் பெண்கள் காலுக்கணியும் ஆபரணங்கள் கூறப்பட்டன. குறங்கு செறி என்பது கணுக்காலுக்கு மேலே அணியும் நகை.

பிறங்கிய முத்தரை முப்பதிருகாலு என்பது முத்துச்சரங்கள் பரு முத்தக்கோவை முப்பத்திரண்டாற் செய்து விரிசிகை என்னும் இடைக்கு அணியும் ஆபரணத்தை பூத்தொழில் செய்யப்பட்ட நீலப்பட்டாடையின் மீது உடுத்தினாள் என்று பொருளாகும்.

காமர் கண்டிகை என்பது தோளுக்கு அணியும் நகை, மாணிக்க வளையும் முத்துவளையும் பொன் சங்கிலியால் பிணைக்கப்பட்டன. இனி முன்கைக்கு அணியப்படும் ஆபரணங்கள் முகப்பில் கட்டிய மாணிக்கத்துடன் பத்திகளுள் வைரங்கள் பதிக்கப்பட்டு சித்திர

வேலைப்பாடமைந்து சூடகமும் செம்பொன்னாற் செய்த வளையும், நவரத்தின வளையும், சங்கு வளையும், பவளவளையும் முன் கைக்கு அணிந்தாள்.

அடுத்து காந்தள் விரல்களுக்கு அணியும் மோதிர வகைகளான வாளைமீன் வாயைப் பிளந்து கொண்டிருக்கும் வேலைப்பாடுடைய நெளி மோதிரமும், மாணிக்கமும், வயிரமும், மரகதமும் பதித்த மோதிரங்களையும் அணிந்திருந்தாள்.

வீரச்சங்கிலி, நேர்ச்சங்கிலி, நாண், சவடி, சரப்பளி, முத்தாரம் ஆகிய கழுத்தாரங்கள் பூண்டு பின்புறம் பல மணிகளால் செய்யப்பட்ட பதக்கத்தால் சிறுபுறம் என்ற கழுத்துப்பிடரை மறைத்தாள்,

காதணிகளான இந்திர நீலக் கடிப்பினை, சந்திரபாணி ஆகியவைகளை மாதவி தன் அழகு மிகும்படி அணிந்தாள் என்று சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இத்தனை ஆடை ஆபரணங்களும், நறுமணப் பொருட்களின் பயன்பாடும் தமிழகத்தில் இருந்தன என்பதற்கு மேலே கூறிய பகுதி சான்றாகும்.

**கானல் வரி**

கானல் வரி என்பது கடற்கரையில் கானலைப் பற்றிப் பாடுகின்ற இசைப்பாட்டு, கானலாவது கடற்கரைச் சோலை. இதனை நெய்தல் என்று தமிழர் கூறுவர். இதற்கேற்ற காலம் எற்பாடு எனலாம்.மாலையின் முதற்கூறே எற்பாடு ஆகும்.

கடற்கரையில் கோவலனும் மாதவியும் பாடிய இசைப்பாடல்களைக் கொண்ட பகுதியாதலின் கானல் வரி எனப் பெயர் பெற்றது.

> **"ஏவலன்பின் பாணியாதெகை**
> **கோவலன் கையாழ் நீட்ட அவனும்**
> **காவிரியை நோக்கினவுங்**
> **கடற்காலை வரிப்பாணியும்**
> **மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்குமின்"**
> **(சிலம்பு கானல்:கட்டுரை1 16-20)**

மாதவி கோவலனை நோக்கி, அன்பே நின் பணியாது என வினவ, ஆர்வத்துடன் யாழினை வாங்கிய கோவலன், மாதவியினது நெஞ்சம் பெரிதும் மகிழ்தல் வேண்டிக் காவிரியைக் கருதிய வரிப் பாடல்களையும் யாழ்மேல் வைத்து இசைக்கத் தொடங்கினான் என்று அடியார்க்கு நல்லார் உரை கூறியுள்ளார்.

> **"நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழ்க**
> **கலத்தொடு புணர்ந்த மைந்த கண்டத்தால்**
> **பாடத் தொடங்கும்"** **(சிலம்பு கானல் வரி:கட்டுரை10:24)**

கோவலன் யாழ் வாசித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

கதை நிகழ்வினை நோக்கும்போது இப்பாடல்கள் மாதவி பாட வேண்டும் என்றால் கோவலனும் பாடியிருந்தால் தான் அது சாத்தியம் ஆகும்.

> **"கானல் வரிப்பாடல் கேட்ட மான்நெடுங்கண் மாதவி"**
> **(கானல்.கட்டுரை1 ப.100)**

என்ற வரி கோவலனும் பாடினான் என்பதையே காட்டுகிறது. கோவலன் பாடல், கருவியிசை அனைத்திலும் வல்லவன், மாதவி பிறவிக் கலைஞர்,

குரலிசையிலும்,யாழிசையிலும் நுட்பமான அறிவு வாய்ந்தவள். எனவே அவன் பாடல் நிலத் தெய்வமும் வியப்புறும் படி ஒப்பற்றதாக இருந்தது.

காவிரியை நோக்கினவும் என்ற வரிகளுக்குக் காவிரியை நோக்கின பாடல்களைக் குரலிசையில் பாடிக்கொண்டு, கானல் வரிப் பாணியை யாழில் வாசித்தான் எனப் பொருள் கொண்டு இக்காதையில் உள்ள இசை சார்ந்த செய்திகள் ஆராயப்பட்டன.

**நெய்தற்பண்**

நெய்தற்குரிய சிறுபொழுது விளரிப்பண் பாடுதற்கு உரிய காலமாகும், செவ்வழிக்கு உரிமை மாலைக் காலமாகும். விளரிய பண்ணையுடைய நெய்தல் திறனில் யாழாயிருந்தமையின் செவ்வழிப் பண்ணைக் கொண்ட செவ்வழியாழை, மாலைக்குரியதாகவும் இசை வல்லோர் எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

"**ஆகவே சிலப்பதிகாரத்தில் கானல்வரியிற் செவ்வழிப்பாலை, விளரிப்பாலை என்ற இரண்டு இரங்கற் பண்களையும், மாதவி யாழிலே இசைக்கும் நேரம் மாலைக் காலமாகவே இருக்கிறது**."3

இவ்வாறு நெய்தல் நிலத்திற்கு உரிய பொழுது, பண் முதலியவை கானல்வரியில் மிகவும் பொருத்தமாக இடம் பெற்றுள்ளமை காணத்தக்கது.

**பாலை நிலம்**

பாலை நிலம் ஐவகை நிலங்களுள் ஒன்று இலக்கியங்களில் வறண்ட, வெம்மையான, நிலமாகப் பாலை நிலம் வருணிக்கப்படுகிறது. **"பால + ஐ = பாலை, பால –என்ற சொல்லுக்கு பிரிவு என்பது பொருள். ஐ என்றால் வளம் என்று பொருள், அதாவது நீர்மைத் தன்மை பிரிந்த நிலம் என்பதால் பாலை நிலம் என்பார்கள்"4**

தமிழகத்தில் இத்தகைய வறண்ட தன்மை வாய்ந்த, பாலை என்று தனித்த ஒரு நிலம் இல்லை.

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து**
**நல்லியல்பிழந்து நடுங்கு துயருறுத்துப்**
**பாலை என்பதோர் படிமங்கொள்ளும்"**

**(சிலம்பு காடுகாண்காதை: 64-66)**

வேனிற் காலத்தில் வெயிலின் கொடுமையினை முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தமக்குரிய நல்ல பண்புகளையிழந்து, துன்பத்தை மிகுவிக்கும் பாலை நிலமாக மாறிவிடும் என்பர் இளங்கோவடிகள்.

**"கடுங்கதிர்த் திருகலின் நடுங்கு எய்தி**
**ஆறுசெய் வருத்தத்துச் சீறடி சிவ"(சிலம்பு வேட்டுவ வரி:1-2)**

என பாலை நிலத்தின் வெம்மையை விவரிக்கிறார்.

இளவேனிலும், முதுவேனிலும் பாலை நிலத்துக்குரிய பெரும் பொழுதுகள் ஆகும். ஆனெறிபறை, சூறைச்சின்னம், துத்துரிக்கொம்பு, குழல், வெண்கலமணி, துடி, சிறுபறை, கொம்பு போன்ற பாலைக்குரிய இசைக்கருவிகளும் இக்காதையில் இடம்பெற்றுள்ளன.

**உரிப்பொருள்**

பிரிதல் மற்றும் பிரிதல் நிமித்தம் பாலை நிலத்துக்குரிய உரிப்பொருளாகும்.

**"உலவு உற்ற திங்கள் முகத்தானைக்**

**கவவுக்கை நெகிழ்ந்தனனாய்”**

**(சிலம்பு கானல்- கட்டுரை1)**

என முழுநிலவு போன்ற முகத்தினையுடைய மாதவியின் கைப்பிணைப்பை அந்நிலையிலேயே நெகிழ்ந்து விட்டவளைத் தனியே பிரிந்து, தன் ஏவலாளருடன் கோவலன் சென்றுவிட, மாதவி தனியள் ஆனாள் எனக் கோவலன் மாதவி ஆகியோர் பிரிவையும், கோவலன் தன் தாய் தந்தை உற்றார் உறவினர் பிறந்த மண் இவைகளைப் பிரிந்து மதுரை சென்ற நிகழ்வினையும் குறிப்பதால் பாலைக்குரிய ஒழுக்கமும் கூறப்பட்டது எனலாம்.

**இசைத்தமிழும் தமிழிசையும்**

வேனிற்காதையில் நாற்பெரும் பண்கள், பண்ணின் திறங்கள், யாழ் இசைக்கும் முறை ஆகிய இசைத்தமிழ் செய்திகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. வேட்டுவ வரியில் இசைப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. “**வரி என்ற சொல்லுக்கு இசை, கூத்து என்ற பொருள்கள் உண்டு காலை வரியும் ஊர்சூழ் வரியும் கூத்தால் பெற்ற பெயர்கள்**”5 எனக் கூறுவது எண்ணிப் பார்க்கத்தக்கதாகும்.

**வேனிற்காதை**

கானற்சோலையில் கோவலன் ஊடல் கொண்டு பிரிந்து செல்ல, அவன் பிரிவைத் தாங்க மாட்டாதவளாக வானுற உயர்ந்த மேல்நிலை மாடத்தில் அமைந்திருந்த வேனிறப் பள்ளிக்குச் சென்று அதிராத மரபினையுடைய சிறந்த யாழினைத் தொழுது தன் கையிலே வாங்கி முதலில் பாடத் தொடங்கினாள். பிறகு வாசிக்கவும் செய்கிறாள் அதன்மூலம் தன் மனக்கவலையை மறக்க முயல்கிறாள்.

“**இமிறும் யாழும் இணைய இசை கூட்டும் முறையை இளங்கோ சிலப்பதிகாரத்தில் மாதவி என்ற பாத்திரத்தின் துணைகொண்டு காட்டுகிறார்**”6 என்பர்.

யாழிசைப்போர் அமரும் முறை:

**“அதிரா மரபின் யாழ் கை வாங்கி**
**மதுரகீதம் பாடினன் மயங்கி**
**ஒன்பான் விருத்தியுன் தலைக்கண் விருத்தி**
**நன்பால் அமைந்த இடுக்கையன் ஆதி”**

**(சிலம்புவேனிற:; 23-26)**

என அவள் வீற்றிருந்த முறையினை இளங்கோ விவரிக்கிறார்.

மாதவி கோவலனைப் பிரிந்ததும் யாழை எடுத்து வாசிக்கத் தொடங்குகிறாள். அதிராத மரபுடைய யாழைக் கையில் வாங்கிப் பதுமாசனமாக அமர்கிறாள், யாழிசைப்போர் இருப்புமுறை இதுவாக இருத்தல் வேண்டும்.

அதனால் முதலில் இருத்தல் குறித்த விதியினைக் குறிப்பிடுகிறார் எனலாம்.

மாதவியின் பாடலை மதுரகீதம் என்று அடிகள் வருணிக்கிறார்.“**இனிமையான பாடல் என்பது இதன் விளக்கம். பாடலுக்குக் ‘கீதம்’ என்ற சொல் முதன்முதலாகத் தமிழில் இளங்கோவால் இந்த இடத்தில்தான் பயன்படுத்தப்படுகிறது**”7 என்று டாக்டர் ஒ.என்.பெருமாள் அவர்கள் இதனை விளக்குகிறார்.

இளங்கோவின் காலத்தில் தமிழிசை அமைப்பு எவ்வளவு நுட்பமாக வகுத்துக் காட்டப்பட்டுள்ளது என்பதை நன்கு அறியலாம். தமிழிசை உணர்வில் தோன்றி, உள்ளத்தில் கலந்து, அறிவால் முறைப்படுத்தப் பெற்று, இனிமை நிறைந்த இன்பக் கலையாக இளங்கோவின்

காலத்தில் மிகச்சிறப்பாக வளர்ந்துள்ள நிலையைக் காணமுடிகிறது.என்பதனால் தமிழரின் வாழ்வில் இசைபெறும் தகுதியிடத்தினை விளக்குகிறார் எனலாம்.

கோவலனது பிரிவால் துன்பம் அடைந்தாள்.இசை தன் துயரைப் போக்கும் என எண்ணி யாழிசைத்துப் பாடினாள் மாதவி.

வேட்டுவ மகளாகிய சாலினி கொற்றவைக்கோலம் புனைந்து ஆடிய நிகழ்ச்சியைக் கூறுவது சிலம்பிலுள்ள வேட்டுவ வரியாகும், இது கூத்தாற்பெற்ற பெயர் என்று அடியார்க்கு நல்லார் கூறுகின்றார்.

கொற்றவைக் கோயிலின் முன்றிற்சிறப்பை உரைக்கும் பகுதியாக மூன்று பாடல்கள், முன்னிலைப் பரவல் என்ற முறையில் பாடப்பெறும் மூன்று பாடல்கள் கொற்றவை ஆடிய கூத்தினை விளக்கும் மூன்று பாடல்கள், கொடை, அவிப்பலி, பலிக்கொடை என இவைகளை விளக்கும் பாடல்கள் என இப்பகுதி இசைப்பாடல்களால் நிரப்பியுள்ளன.

வேனிற்காதை மற்றும் வேட்டுவவரி ஆகிய பகுதிகள் தமிழர் தம் கலைச் சிறப்பையும், குரலிசை மற்றும் யாழிசையில் அவர்கள் அடைந்திருந்த உன்னத நிலையினையும் நன்கு விளக்குகின்றன

.

**முல்லை நிலம்**

**“மாயோன் மேய காடுறை உலகம்”8**

காடு மற்றும் காடு சார்ந்த பகுதியினைப் பழந்தமிழர் முல்லை நிலம் என்ற அழைத்தனர். முல்லை நிலத்துக்குரிய பெரும்பொழுது கார்காலம் எனவும் சிறுபொழுது மாலை எனவும் வகுக்கப்பட்டுள்ளன.

இளங்கோவடிகள் தொல்காப்பிய வழிச்செல்பவர் ஐவகை நிலங்களுக்கும் ஐந்து காதைகளை அமைக்கிறார். அந்தந்த சில மக்களின் நாட்டார் பாடல்களையும், பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும் அக்காதைகளில் தருகிறார். முல்லை நில மக்களின் வாழ்க்கையை ஆய்ச்சியர் குரவையில் தருகிறார்.

**“ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்**
**கோவலர் வாழ்க்கை ஓர்கொடும்பாடு இல்லை”**
**(சிலம்புஅடைக்கலம்:120-121)**

என இளங்கோ ஆயர்களின் வாழ்க்கையினை மெச்சிப்பேசுகிறார்.

முல்லை நிலத்தின் தெய்வமான மாயவனைத் தொழுவதன் மூலமாக இடை மகளிர் கைகோர்த்துக் கொண்டு, தமக்கு நேரவிருக்கும் துன்பத்தைப் போக்க முல்லைத் தீம்பாணிப்பாடிக் குரவைக் கூத்து ஆடுகின்றனர்.

இல்லிருத்தல் முல்லை என இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைக்குரிய உரிப்பொருள்கள் ஆகும். யாழிசையைக் காரணமாக வைத்து கோவலனின் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டி கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் வந்தான்.

**ஆயர்கள்**

ஆயர்களிடையே பல்வேறு பழக்கவழக்கங்களும் நம்பிக்கைளும் காணப்படுகின்றன.அவை அவர்கள் வாழ்வியலை ஒட்டியே அமைந்திருக்கின்றன எனலாம்.

**“ஆனேறு பாய வருவதுபோல் எதிரே வந்தால்”9** அதனைத் தீச்சகுனம் என ஆயர்கள் நம்பினர்.

**“இமிலேறு எதிர்ந்தது இழுக்கு என அறியான்”**

**(சிலம்புகொலைக்களக்காதை : 100)**

என்ற தொடர் இதனை விளக்குகிறது. இது ஆயர்களின் நம்பிக்கையாகக் கூறப்படுகின்றது.

**“குடத்துப்பால் உறையாமையும்**
**குவி இமில் ஏற்றின் மடக்கண்நீர் சோர்தலும்**
**உறியில் வெண்ணை உருகாமையும்**
**மறிமுடங்கி ஆடாமையும்**
**மான்மணி நிலத்து அற்று வீழ்தலும்**
**வருவது ஓர் துன்பம் உண்டு என”**

**(சிலம்புஆய்ச்சியர் குரவை:5)**

மேலே கூறியவை துன்பம் நேர உள்ளது என்பதற்கு அறிகுறி என நம்பினர்.அதற்குப் பரிகாரமாக தம் முன்னோனாகிய பலராமனுடன் கண்ணன் ஆயர்பாடியில் விளையாடிய வாலசரிதை நாடகங்களில் நப்பின்னைப் பிராட்டியோடு அவன் ஆடிய குரவைக் கூத்தினை ஆடி அம்மாயவனை வழிபடுவோம் இதன்மூலம் இக்கன்றுகளின் துயர் நீங்கும், குரவையாடலாம் வாருங்கள் என்று அழைக்கின்றனர். இறைவனின் திருச்சரிதத்தைப் பாடி ஆடுவதன் மூலம் தீமையிலிருந்து விடுபடலாம் என அவர்கள் நம்பினர். ஆய்ச்சியர் குரவைக்கூத்து என்பது முல்லை நிலத்து ஆயர் மகளிர்கள், தம் முல்லை நிலத்தின் ஊருக்கு வர இருக்கும் தீங்கினைப் போக்குவதற்காக, முல்லை நிலத்துக் கடவுளாகிய மாயோனை முல்லை நிலத்து யாழாகிய செம்பாலை என்னும் பண்ணில் பாடல்களைப்பாடி வணங்கிக் குரவையாடும் ஒரு வகைக் கூத்து ஆகும்.

**முடிவுரை**

சிலப்பதிகாரத்தில் கலைஞர்கள் மிகவும் செழிப்புடன் வாழ்ந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. ஆய்ச்சியர் குரவையில் ஆயர்களின் வாழ்க்கை முறையும் குரவைக் கூத்துப் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன, இப்பகுதி நுட்பமான கலை பற்றிய செய்திகளைக் காட்டுவதற்காக அமைந்துள்ளது. நாடுகாண் காதையில் உழவர்களின் ஏர்மங்கலப்பாட்டையும் உழத்தியரின் இசையோடு பொருந்தி வராத புதுமையான பாடல் வகைகளையும் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். மேலும் செண்டை என்னும் கருவியைப் பொருநர்கள் இசைத்ததையும், ஆறலைக் கள்வர்கள் சின்னம் முதலான கருவிகளை இசைத்ததையும் அறி;கின்றோம். அம்மானை வரி, கந்துக வரி, ஊசல் வரி, வள்ளைப்பாட்டு, மாதர் பாணி முதலான பாடல் வகைகள் குறித்த செய்திகளும், துணங்கைக் கூத்து, குரவைக் கூத்து முதலான ஆடல்கள் குறித்த செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

தொல்காப்பியம் காட்டும் நிலப்பகுப்பு முறையும், சிலப்பதிகாரத்தில் காணப்படும் ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்களின் கலை சார்ந்த வாழ்வியல் குறித்த செய்திகளும் ஆராயப்பட்டது.

**சான்றெண் விளக்கம்**

1) சீ.பத்மினி. சிலப்பதிகாரம் காட்டும் தமிழரின் இசை சார்ந்த வாழ்வியல் சென்னை - 1999- ப.53
2) மேலது - ப.55
3) எஸ்.செயலெட்சு, சிலப்பதிகாரத்தில் இசைச் செல்வங்கள் சென்னை - 1980 - ப.167
4) மு.தங்கராசு. ஆய்வுமலர் - தமிழிசைச் சங்கம் மதுரை - 2001- ப.32
5) ச.வே.சுப்பிரமணியன், சிலப்பதிகாரம் திருச்சி - 1970 இசைப்பாடல்கள்,முதல் பதிப்பு சென்னை - 1973 - ப.58
6) ஏ.என். பெருமாள், தமிழர் இசை சென்னை -1990 - ப.205
7) ஏ.என். பெருமாள், தமிழர் இசை சென்னை - 1990 - ப.206
8) தொல்: பொருள்: கழகப் பதிப்பு, சென்னை– 1963. - நூ:5:1
9) கா. வாசுதேவன், இரட்டைக் காப்பியங்கள் காட்டும் சமுதாயம் மதுரை -1889- ப.164